*Tamilmanam – International Research Journal of Tamil Studies*
*An international, peer-reviewed academic journal*
e-ISSN: 3049-0723
pISSN:3107-7781

## தமிழ்மணம்

Peer-reviewed · Open access · Google Scholar · Crossref DOI · SJIF Imapact Factor 3.5 · Monthly
**DOI: 10.63300/tm12052026.24**
Vol. 12, No. 05 (2026) 12 05 2026, p314–324 TIRJTS-2026-0028

RESEARCH ARTICLE

# எண்ணும் எழுத்தும்

*Numbers and Letters*

**இரா.சிவலிங்கம்[1,*]**

[1] முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்மேம்பாட்டுச் சங்கப்பலகை, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை - 600005

***Corresponding author:** இரா.சிவலிங்கம், sivaphd23@gmail.com

**ORCID iD:** இரா.சிவலிங்கம் https://orcid.org/0009-0002-0299-1525

**DOI: 10.63300/tm12052026.24**

ARTICLE INFO

**Article history**
Received: 10 October 2026
Revised: 12 October 2026
Accepted: 15 October 2026

**Article ID**
TIRJTS-2026-0028

**Peer review**
Double-blind peer review

**Keywords**
Number
letter
Aathichudi
Kondraiventhan
Thirukkural
sound form
written form. folk usage
arithmetic
language education

ABSTRACT

Tamil literature and grammar education have a long-standing tradition. By learning them, Tamil society has continued to follow and produce literary works in a refined manner to this day. Among these, this article is based on the significance that the literary records concerning the grammar and literary education systems that emerged during the Kalabhra and Pallava periods, identified as the period of ethical literature, and the ideas indicated by their commentarial interpretations, point to the causal terms in which “number” denotes grammar education and “letter” denotes literary education

**How to cite this article:** இரா.சிவலிங்கம் (2026). எண்ணும் எழுத்தும். *Tamilmanam – International Research Journal of Tamil Studies*, *12*(05), 314–324. https://doi.org/10.63300/tm12052026.23
**Copyright and licence:** © 2026 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

## ஆய்வுச்சுருக்கம்

தமிழ் இலக்கியம் மற்றும் இலக்கண கல்வி என்பது பழமையான மரபை உடையது. அவற்றை கற்று இலக்கிய ஆக்கங்களை இன்றளவும் செம்மையான முறையில் தமிழ் சமூகம் பின்பற்றி வருகிறது. அவற்றில் அற இலக்கிய காலமாக சுட்டப்பட்ட கலாப்பிரர் மற்றும் பல்லவர் காலத்தில் எழுந்த இலக்கண மற்றும் இலக்கிய கல்வி

முறைகள் பற்றிய இலக்கியப்பதிவுகளும் அவற்றுக்கான உரைப்பொருள்கள் சுட்டிய கருத்துகளில் இருந்து எண் என்பது இலக்கண கல்வியையும் எழுத்து என்பது இலக்கிய கல்வியையும் சுட்டும் காரணப்பெயர்கள் எனும் பொருண்மையில் இக்கட்டுரை அமைகிறது

**திறவுச்சொற்கள்**

எண், எழுத்து, ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன், திருக்குறள், ஒலி வடிவம், வரி வடிவம். நாட்டார் வழக்கு, கணக்கு, மொழிக்கல்வி.

**முன்னுரை**

உலக மொழிகள் அனைத்திலும் ஒலி வடிவம் இருக்கிறது. அவற்றை பயன்படுத்தும் மக்களின் இடையே நாட்டார் வழக்காறு அடிப்படையில் பல பாடல்களும் நம்பிக்கைகள் சார்ந்த பழக்க வழக்கங்களும் காணப்படுகிறது. ஆனால் அவற்றில் வரிவடிவம் எய்திய மொழிகள் என்பதும் சிலவே ஆகும். அவ்வரிவடிவத்திலும் பிறந்த இந்நாட்டார் வழக்காற்று இலக்கியங்கள் காலப்போக்கில் வரையறுக்கப்பட்ட இலக்கிய முறைகளைப்பெற்றுள்ளது. பேரகத்திய திரட்டு உரைப்பதுபோன்று இலக்கியத்திலிருந்து இலக்கணம் தோன்றுவது போல அம்மொழிகளுக்கான இலக்கண வரைவை எய்திய மொழிகள் சிலவே. இங்கு கிளை மொழியாக மூல மொழியில் இருந்து சிலகூறுகளை மட்டும் அடிப்படையாகக் கொண்டு தோன்றிய கிளை மொழிகள் பலவாக பல்கி பெருகிய பொழுதும் அம்மூல மொழி பயன்பாடற்று அழியும் பொழுது அக்கிளைமொழி ஒரு முழுமையற்ற இலக்கிய வகைகளையும், படைக்கப்பட்ட இலக்கியங்களுக்கான முழுமையற்ற இலக்கணத்தையும் மட்டுமே படைக்கின்றன. அவ்விலக்கணத்தைப் பயன்படுத்தி இலக்கிய மரபு ஆக்கங்களை உருவாக்குகிறார்கள் இலக்கணம் மொழியின் மரபார்ந்த வளர்ச்சிநிலையில் காலந்தோறும் மொழியின் சீர்மையான பயன்பாட்டிற்கும், புதிய மொழி பரிணாமத்திற்கும் காரணமாக அமைகிறது. அதாவது காலந்தோறும் மொழியில் ஏற்படும் மாற்றங்களை அறிதற்கும் உதவுகிறது. வேற்றுமொழியின் தாக்கத்தாலும் கலப்பினாலும் ஏற்படும் மாற்றங்கள் அவ்வகையான புதிய இலக்கியங்களை உருவாக்க காரணமாக அமைகிறது. அவ்விதம் அப்புதிய இலக்கியங்களுக்கான படைப்பாக்க கருவியாக இலக்கணத்தையும் வரையறுக்க வேண்டிய தேவை அம்மொழிக்கு ஏற்படுகிறது. மொழியின் இலக்கியத்தையும் இலக்கணத்தையும் அம்மொழியில் வழங்கும் பான்மையும், அவற்றின் தோற்றத்தை மானுடவியல் பார்வையில் மொழி ஓர் பயன்பாட்டுக்கருவி எனவும், மனிதன் தன் உற்றறியும் திறத்தால் கண்டறிந்த இம்மொழி அமைப்பு எனும் இலக்கிய. இலக்கணத்தையும் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**இலக்கியம் என்பதோர்**

இலக்கியம் என்பது யாது? என்ற வினாவிற்கு விடைகூறுவது மிகவும் அலாதியானது. இலக்கியம் என்றவுடன் செய்யுள் என்று பாடல்களையும் அவற்றின் காலந்தோறும் வளர்ந்த பா வகைகளையும் சுட்டி இவைதான் இலக்கியம் என்பர். ஆனால் இலக்கியம் என்பது மானுடவியல் பார்வையில் எவ்வாறு தோன்றுகிறது என்பதை விளக்கியாக வேண்டும். விலங்குகளின் உணர்வெழுச்சியின் வெளிபாட்டுக்கருவியாக காற்றானது உந்தி எனப்படும் உதரவிதானத்தினின்று தோன்றி மார்பு, கழுத்து, தலை எனும் நிலையில் நின்று அண்ணம், நா, பல், இதழ் முதலிய துணை உறுப்புகளால், உணர்ச்சியினால் எழுந்த காற்றானது தலை அமைப்பின் காரணமாகவும் மேற்கண்ட உறுப்புகளின் அசைவுகளினாலும் தோன்றும் ஒலிகளின் கூட்டமைப்பு பொருளுடைய சொற்களை உருவாக்கி ஒலிகளாக வெளிப்படுத்துகிறது. அச்சொற்கள் தான் கண்ட பொருளைச் சுட்டவும் உணர்ந்த பொருளை உணர்த்தவும் கருவியாக செயல்படுகிறது. அச்சொற்களின் பண்பை உற்று காண பெயர் மற்றும் வினை ஆகிய இரு சொற்களாகவும் அவற்றிடையே தொடர் இணைப்பாக இடைச்சொற்களும், பெயர் மற்றும் வினை சொற்களின் சிறப்பினை விளக்க உரிச்சொல்லாகவும் வகுப்பர். அவற்றினால் உண்டான பொருளுடைய தொடர்களே உணர்ச்சிகளின் ஒலிவடிவமான செய்யுளாகவும் ஏட்டில் எழுதப்படாமல் வாய்மொழியாக நின்றகாலை நாட்டுப்புறப் பாடல்களாகவும், ஏட்டில் எழுதும் போழுதும் அவற்றின் கட்டமைப்பினைக்கொண்டு யாப்பு எனும் வரிவடிவ நிலையிலும் காணப்படும் உணர்வெழுச்சியின் வெளிபாடே இலக்கியம் ஆகும்.

மேற்கண்ட மொழி தோற்ற நிலையை ஆயுங்கால் உள்ளிருந்து எழுவதனால் எழுத்து என்றும் அவ்வாறு எழுவதே உணர்ச்சி என்றும் அவையே இலக்கியம் என்பதும் விளங்கும். அவ்விலக்கியம் ஒரு மொழியின் பயன்பாடு மற்றும் பரவலாக்க அமைப்பில் விரிவடைகிறது. அவற்றின் பண்பாட்டுக்கூறுகள் அம்மொழிக்கான தனித்த சிறப்புகளாக அமைந்துவிடுகின்றன. மொழியில் காணப்படும் மரபுத்தொடர்ச்சிக்கும் அதுவே காரணமாகவும் அமைந்துவிடுகிறது.

தமிழ் இலக்கியங்களான சங்க இலக்கியங்கள், அற இலக்கியங்கள், பக்தி இலக்கியங்கள், தொடர்நிலைச்செய்யுள்களான காப்பியங்கள், சிற்றிலக்கியங்கள், தனிப்பாடல்கள், தற்கால உரைநடை, புதுக்கவிதை வரையிலான இலக்கியங்கள் அனைத்தையும் அகம், புறம், அறம், பக்தி என்ற கூறுகளுக்குள் அடக்கி விடலாம். அதாவது தற்காலத்தில் காதலன் ஒருவன் தன் காதலியின் நலத்தை வர்ணிக்க அக்கவிதை அகப்பண்பெய்தி விடுகிறது. நாடு மக்கள் எனும் சிந்தனை வெளிபாடுகள் புறம் என்றாகிவிடுகிறது. அவ்வகையான அகம் மற்றும் புற பண்பாட்டு ஒழுக்கங்களை அறிவுறுத்த அவை அறம் ஆகிவிடுகிறது. இவ்வாறான பாடற்பொருளைக்கொண்ட தமிழ் இலக்கியங்களின் தொடக்ககால படைப்பாக்கமும் மேற்கூறிய நாட்டார் இலக்கியங்களாகவே இருந்து வந்ததற்கான சுவடுகளாக

இன்றளவும் திணை இலக்கியங்கள் காட்சி தருகின்றன. வரிவடிவம் பெறுவதற்கு முன்னமாக ஒலி வடிவத்தில் தோன்றிய இவ்விலக்கியங்களே வரி வடிவத்தை காலந்தோறும் பெற்றது. இவ்வொலி மற்றும் வரி ஆகிய இரு வடிவங்களுக்கும் பொது நிலையில் நின்று அவற்றைச் சுட்ட அமைந்த சொல்லாக எழுத்தே சுட்டப்படுகிறது. உள்ளிருந்து ஒரு பொருளைக் கண்டவுடனே அதன் காரணமாயும், இடுபொருளாயும் தோன்றிய சொற்கள் எழுந்து முன்னிற்கும் பண்பானதால் அவை எழுத்து என்னும் சுட்டினால் அமைந்தது. உணர்வெழுச்சியின்பால் அமைந்த இவ்வெழுத்தே காலப்போக்கில் இலக்கியங்களை சுட்டவும் வரிவடிவங்களை சுட்டவும் பயன்படுத்தப்பட்டன.

**இலக்கணம் என்பத்தோர்..**

எழுத்தை இலக்கியம் என ஏற்றாலன்றி இலக்கணத்தை எண் எனும் அமைப்பில் ஏற்க முடியும். அது எவ்வாறெனில், உணர்ச்சி வழிப்பட்ட இலக்கியத்தின் அமைப்பு இயக்கம் அதன் கருவி ஆகியவற்றை உற்று தெளிந்து அவற்றின் பண்பு இயக்கம் அவை தத்தமக்குள் புணரும் தன்மை, அவற்றின் குறுகும், அளபெடுக்கும் தன்மை ஆகியவற்றை விளங்க முடியும்.

இவ்வெழுத்து இலக்கியம் என்ற பொருண்மையில் ஔவையாரும், வள்ளுவரும்

எண்ணெழுத்து இகழேல் (ஆத்தி.7)

எண்ணும் எழுத்தும் கண் எனத்தகும் (கொன்றை.7)

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்

கண்ணெண்ப வாழும் உயிர்க்கு குறள் (குறள்.392)

என்றனர். அறம்பாடும் புலவர்களின் காலத்தில் இவ்வாறு எண் மற்றும் எழுத்து என்று சுட்டி எழுத்து என்பதனை எழுத படிக்க என்னும் பொருளில் மட்டும் சுட்டி அவற்றை பழித்தல் கூடாது என்றும், கல்வியின் கற்றல் கருவியாக அமைந்த எழுத்தை கண் என்று போற்றியும் காக்க வேண்டிய கடமையைச் சுட்டுகிறார்கள்.

இவ்விடத்தில் எழுத்து என்று சுட்டி உரைக்கப்பட்ட எழுத்து வரிவடிவம் என்ற எழுதப்படிக்க துணைப்புரியும் எழுத்தா அல்லது இலக்கியமா என்பதை ஊன்றி அறிந்தால் விளங்கும். வள்ளுவரும் தமிழ் மூதாட்டியும் கல்வியின் தேவையை உரைக்க துணிந்தகாலை கல்வியை சிறப்பாகவும் கசடற கற்கவும் வேண்டி எண் என்ற கணக்கையும் எழுத்து என்ற எழுத்தறிவையும் சுட்டுவதாகவே பெரும்பாலும் அன்றைய காலந்தொட்டு தற்காலம் வரையிலான உரையாசிரியர்கள் அனைவரும் பொருள் கூறிச்செல்கின்றனர். வள்ளுவர் கூறும் கல்வி அதிகார நிலையில் இருந்து இரண்டாம் பாடலாகவே எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும் கண்ணென்ப வாழும் உயிர்க்கு என்கிறார். தவறில்லாமல் கற்க வேண்டி,

கற்க கசடறக் கற்பவை கற்றபின்

நிறக அதற்குத் தக (குறள்.391)

என்று கூறி அடுத்ததாக இடம்பெற்ற குறளில் எண்ணெண்ப ஏனை எழுத்தென்ப என்கிறார். கல்வி அதிகாரத்தில் பத்துக்குறள்களில் கல்வியின் சிறப்பு மற்றும் பயன் ஆகியவற்றை கூறும் வள்ளுவர், இக்குறளில் மட்டுமே கல்வியின் வகைகளை கூறுகிறார். அக்குறளின் உண்மையான பொருளை இனிக் காண்பொம்.

திருக்குறள் தோன்றிய பொதுவான காலக்கணிப்பாக கி.மு. 31 முதல் கி.பி. 31 என அனைவரும் கொள்வர். அக்காலை தமிழகத்தில் சங்ககாலமாக கருதப்படும் மூவேந்தர் ஆட்சியே இருந்தது. அதற்கடுத்த காலக்கட்டத்தில் ஏற்பட்ட களப்பிரர் ஆட்சிகாலத்தில் ஏற்பட்ட ஆட்சி மாற்றம் மற்றும் பண்பாட்டு மாற்றத்தால் சமயம் முதலான பல மாற்றங்களும் இலக்கிய மாற்றங்களும் ஏற்படலாயின. கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில் தோன்றிய சமண பௌத்த சமயங்கள் தமிழகத்தில் பரவியிருந்தாலும். களப்பிரர் ஆட்சிகாலத்தில் உட்சம் பெற்றது. அவ்வாறு சமணசமய ஆதிக்கம் அதுவரை தமிழ் இலக்கிய நெறியான அகம் மற்றும் புறம் சார்ந்த இலக்கியங்களைச் சிற்றின்ப பொருளாக கருதி தவிர்த்து மதுரையில் இருந்த கடைசங்கத்தை களைத்து முடிவுக்கு கொண்டுவந்தது. ஆனால் களப்பிரர்களால் தமிழகத்தில் பல்கி பரவிய சமணர்களுக்கு இங்கிருக்கும் மொழியை கற்கவும் மீண்டும் கற்பிக்கவும் கருவி தேவைப்பட்டது. தங்களின் அறக்கருத்துக்களைப் பாடவும் தமிழ் மொழியை அவர்கள் கற்க வேண்டிய தேவை ஏற்பட்டது. அவ்வாறு அவர்கள் அதுவரை வழங்கி வந்த தமிழ் இலக்கியங்களை கற்று உற்றறிந்து மொழியின் அமைப்பு மற்றும் அவற்றில் பயின்றுவரும் எழுத்து மற்றும் சொற் கருவிகளை அறியலாயினர். இவ்விடமே இலக்கணங்கள் தோன்றுகிறது.

எழுவதால் எழுத்து என்றும், அவ்வுணர்வெளியையே இலக்கியம் என்றும் அவற்றின் இயங்கு தன்மையை எண்ணுவதே அதாவது மொழியின் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய கருவிகளை எண்ணுவதே இலக்கணம் என்றும் வரையறுக்கப்படுகிறது. அதாவது ஒரு மொழியின் வழங்கப்படும் இலக்கியத்தின் இயக்கத்தை அதற்கு உதவும் கருவிகளை அறிதல் அல்லது எண்ணுதலே இலக்கணம் ஆகும்.

தமிழ் இலக்கணங்கள் பெரும்பான்மை சமணர்களின் கொடையாகவே கருதப்படுகிறது. ஒரு நிலப்பரப்பில் வழங்கப்படும் ஒரு வளமான மொழியைப் படிக்கவும் எழுதவும் துணைப்புரிவதும் இலக்கணமே ஆகும். அவ்வகையில் இலக்கணத்தின் தேவையோ தோற்றமோ காணப்படாத மொழியில் ஒரு இலக்கணம் வேற்று நிலத்தவர்களின் கலப்பினாலே உருவாகிறது. அவ்வாறு இலக்கணத்தோற்றம் நடைப்பெறாத வரையில் அம்மொழியில் நாட்டார் வழக்காற்றியல் போல

இலக்கியங்கள் மட்டுமே பாடப்பட்டும் தங்களின் குறியீட்டு வரிவடிவங்களால் எழுதப்பட்டு வந்திருக்கும். கடைச்சங்க காலமும் அவ்வக்காலத்தில் பாடப்பட்ட பதினெண் மேற்கணக்கு நூல்களும், அதற்கு முன்னம் இருந்த தொல்காப்பியத்தை அடிப்படையான இலக்கணமாக கொண்டது எனலாம். அதற்கு முன்பிருந்த இடை மற்றும் முதல் சங்கங்களுக்கு அகத்தியமே இலக்கண நூலாக அமைந்தது எனலாம், முதுநாரை, முதுகுருகு, வெண்டாளி, வியாழமாலை, களவியாவிரை முதலான இசை மற்றும் நாடக நூல்களுக்கு அகத்தியமே இலக்கண நூலாக அமைந்த பான்மையை உணரலாம். அவ்வகையில், காலங்காலமாக வழங்கி வந்த இலக்கியங்களுக்கு இலக்கணம் வகுத்த அகத்தியானாரும் தொல்காப்பியரும் பற்றி நச்சினார்கினியர், தம் தொல்காப்பிய பாயிர உரையில்,

**“பாண்டியன் மாகீர்த்தி இருபத்துநாலாயிரம் ஆண்டு வீற்றிருந்தானாதலின் அவனும் அவன் அவையில் உள்ளோரும் அறிவுமிக்கிருத்தலின் அவர்கள் கேட்டிருப்ப அதங்கோட்டாசிரியர் கூறிய கடாவிற்கெல்லாம் குற்றந்தீர விடைகூறுதலின் அரில்தப என்றார்.**

**அகத்தியனார் அதங்கோட்டாசிரியரை நோக்கி ‘நீ தொல்காப்பியன் செய்த நூலைக் கேளற்க’ என்று கூறுதலானும். தொல்காப்பியனாரும் பலகாலுஞ் சென்று ‘யான் செய்த நூலை நீர் கேட்டல் வேண்டும்’ என்று கூறுதலானும், இவ்விருவரும் வெகுளாமல் இந்நூற்குக் குற்றம் கூறிவிடுவலெனக் கருதி அவர் கூறிய கடாவிற்கெல்லாம் விடைகூறுதலின், ‘அரில்தபத் தெரிந்து’ என்றார்.**

**அவர் கேளன்மினென்றற்குக் காரணமென்னையெனின், தேவ ரெல்லாருங்கூடி யாஞ் சேரவிருத்தலின் மேருந் தாழ்ந்து தென்திசை உயர்ந்தது. இதற்கு அகத்தியனாரே ஆண்டிருத்தற்குரியர் என்று அவரை வேண்டிக்கொள்ள, அவரும் தெந்திசைக்கண் போதுகின்றவர், கங்கையாருழைச் சென்று காவிரியாரை வாங்கிக்கொண்டு, பின்னர் யமதக்கினியாருழைச் சென்று அவர் மகனார் திரணதூமாக்கினியாரை வாங்கிக்கொண்டு, புலத்தியானாருழைச் சென்று அவருடன் பிறந்த குமரியார் உலோபாமுத்திரையாரை அவர் கொடுப்ப நீரேற்று இரீஇப், பெயர்ந்து துவாராபதிப் போந்து நிலங்கடந்த நெடுமுடியண்ணல் வழிக்கண் தோன்றிய அரசர் பதினெண்மரையுங் பதினெண்கோடி வேளிருள்ளிட்டாரையும் அருவாளரையும் கொண்டு போந்து காடு கெடுத்து நாடாக்கிப் பொதியின்கணிருந்து, இராவணனைக் கந்தருவத்தால் பிணித்து, இராக்கதரை ஆண்டு இயங்காமை விலக்கித் திரணதூமாக்கினியாராகிய தொல்காப்பியனாரை நோக்கி ‘நீ சென்று குமரியாரைக் கொண்டுவருக’ எனக் கூற அவரும் எம்பெருமாட்டியை எங்கனங் கொண்டு வருவ’ லென்றார்க்கு ‘முன்னாகப் பின்னாக நாற்கோல் நீளம் அகலநின்று கொண்டுவருக’ வென**

**அவரும் அங்ஙனம் கொண்டு வருவழி, வையை நீர் கடுகிக் குமரியாரை ஈர்த்துக்கொண்டு போகத் தொல்காப்பியனாரையும் 'சுவர்க்கம் புகாப்பிர்' எனச் சபித்தார்; யாங்கள் ஒரு குற்றமும் செய்யாதிருக்க எங்களைச் சபித்தமையான் எம்பெருமானும் சுவர்க்கம் புகாப்பிர்' என அவர் அகத்தியனாரைச் சபித்தார். அதனான் அவர் வெகுண்டாராதலின் அவன் செய்த நூலைக் கேளற்க என்றாரென்க" (நச்சினார்க்கினியம் ப.10 -11)**

என்கிறார். நச்சினார்க்கினியர் கூறுவது போல வடக்கிலிருந்து தென்னாட்டிற்கு புகுந்த அகத்தியர் சிவபெருமானிடத்து தொன்மையான தமிழ் மொழியைக் கற்றார் என்றும் அவரே தீரணதுர்மாக்கினி எனும் தொல்காப்பியரையும் கொண்டு வந்தார் எனலாம். ஒரு மொழியைக் கற்க வேண்டின் இலக்கணமே மூலமாக அமைகிறது. மொழியின் ஒலி அமைப்பை மட்டும் கொண்டு பேசலாம் பாடலாம் ஆனால் அதற்கான எழுத்து வடிவத்தினையும், எழுத்தெனும் வரிவடிவத்தையும் சுட்டி விளக்க இலக்கணமே பயன்படுகிறது. அதனை அம்மொழியின் தன்மைகளை விளக்கும் விதமாக அமைய வேண்டி அவற்றின் எழுத்து ஒலி மற்றும் வரி வடிவ பண்பாட்டினைக் கண்டு உற்று அவற்றின் பயன்பாட்டினால் பேசவும் புதியதான இலக்கியம் படைக்கவும் பயன்படும் கருவியாக இலக்கணம் பயன்படுகிறது. சிவபெருமான் அகத்தியருக்கு கற்றுக்கொடுத்ததான முத்தமிழ் இலக்கணமும், அகத்தியரிடம் இருந்து இயல் இலக்கணத்தை கற்று தான் அறிந்த மற்ற இலக்கண நூல்களையும் கொண்டு தொல்காப்பியர் படைத்த எழுத்து, சொல், பொருள் எனும் முப்பகுப்பு இலக்கணமும், பன்னிரு படலத்தின் இடம்பெற்ற புறத்திணைகளை படைத்த தொல்காப்பியனார் முதலான அகத்தியரின் மாணாக்கரான பன்னிருவரும் இலக்கணத்தை கற்று அவ்வகாலத்திற்கு ஏற்ப இலக்கணம் படைக்கலாயினர்.

மேற்கண்ட செய்திகளுக்கு சான்றாதாரங்கள் குறைவு எனும் போதும் வாய்மொழி வழக்காக பல்கி பெருகி வரும் இவ்விலக்கண தோற்ற கதைகளில் இருந்து ஒன்று மட்டும் தெளிவாக விளங்குகிறது. தமிழ் இலக்கணிகள் என்று நாம் அறிந்த யாவரும் வேற்று நிலத்திலிருந்து வந்து மொழியின் அமைப்பை ஆய்ந்தவர்களே ஆவர். அவர்கள் அம்மொழியின் பண்புகளை உற்றறிந்து அதன் எழுத்து சொல் அவற்றின் புணர்ச்சி, தொடர் அமைப்புகள், யாப்பு நிலைகள், அணி பிரயோகம் ஆகியவற்றை தெளிவாகக் கண்டு அவற்றினை நாளும் உணர்ந்து எண்ணி மொழியின் அமைப்பினை இலக்கணமாக வரையலாயினர். இவ்விதம் இலக்கணத்தோற்றத்தைப் பேராசிரியர் கா.சிவதம்பியும் இச்சமயப்பின்னணியில் இருந்து நோக்கி '**நமக்குக் கிடைத்துள்ள மிகப் பெரிய இலக்கண நூல்கள் சமண பௌத்த மரபுகளைச் சார்ந்தவையாகும். தொல்காப்பியம் நன்னூல், வீரசோழியம், (நிகண்டுகள் கூட) சமண பௌத்த கையளிப்புகளே**' (ப.24. தமிழ் இலக்கியப் பேறு – ஓர் அறிமுகக் குறிப்பு, புதிய தமிழ் இலக்கிய வரலாறு) என்கிறார்.

மேற்கண்ட செய்திகளில் இருந்து இரு விதமான முடிவுகள் நமக்கு கிடைக்கின்றன. எழுத்து என்பதை இலக்கியம் என்றும் எண் என்பதை இலக்கணத்தைச் சுட்டும் பொருளிலே நம் புலவர்கள் பயன்படுத்தினர் என்பது விளங்கும். இலக்கண உருவாக்கம் பெருகாத காலம் வரை அதாவது களப்பிரர்கள் ஆட்சி தோன்றாதவரை சங்ககால மரபளவில் எவ்வித இலக்கண இலக்கிய கல்வி தேவைப் பற்றிய குறிப்புகள் காணப்படவில்லை. அகம் புறம் எனும் பாடற்பொருள் கொண்ட திணைப்பாடல்கள் நலிவுற்றப்பின், அறம் பாடும் வழக்கம் மிகவே சமண பௌத்த தாக்கத்தாலும் இலக்கணம் மற்றும் இலக்கிய கல்வியின் பயன் மிகுந்தது. ஆகையால் இலக்கணம் மற்றும் இலக்கிய கல்வியை அறிவுறுத்த புலவர்கல் தம் பாடல்களில் கல்வி அறிவை விளக்கும் போது அதனை சுட்ட காரணப்பெயர்களான ‘எண்’ மற்றும் ‘எழுத்து’ ஆகிய இரு சொற்களையும் பயன்படுத்தலாயினர். அவ்வகையில் எழுத்து என்பது இலக்கியத்தையும் எண் என்பது இலக்கணத்தையும் சுட்டுகிறது.

மனிதனின் ஆறாம் அறிவால் அடைந்த பயன்களில் மொழியும் ஒன்றாகும் அவற்றினை தொல்காப்பிய உயிர் கோட்பாட்டடிப்படையில்

**ஒன்றறி வதுவே உற்றறி வதுவே**

**இரண்டறி வதுவே அதனொடு நாவே**

**மூன்றறி வதுவே அவற்றோடு மூக்கே**

**நான்கறி வதுவே அவற்றோடு கண்ணே**

**ஐந்தறி வதுவே அவற்றோடு செவியே**

**ஆறறி வதுவே அவற்றோடு மனனே**

**நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே.** (தொல். மரபு. நூ.27)

என ஆறறிவுடைய மக்கள் மனம் எனும் சிந்தித்தல் பண்பைக் கொண்டதாலே மனிதன் எனும் பெயர் பெற்றான். அம்மனத்தின் அந்தகரணங்களாக பாவலரேறு ச. பாலசுந்தரம் அவர்கள் தமது தொல்காப்பிய காண்டிகை உரையில் “**மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் அகக்கருவி நான்கனுள் மனம் ஒன்றனைப் பற்றும், புத்தி அதனை ஆராயும், சித்தம் அதனை நிச்சயிக்கும், அகங்காரம் செயல்படுத்தும் ஆதலின் உணரும் கருவிகள் புத்தியும் சித்தமுமேயாம். அவ்வாற்றான் மெய்முதலாகிய ஐம்பொறிகளைப் போலவே மனம் என்னும் அகக்கருவியும் ஒன்றினைப் பற்றி நிற்கும் நிலைமைக்கண் புறக்கருவிகளோடு ஒத்தலின் ‘ஆறறிவதுவே அவற்றோடு மனனே’ என்றார்**”(தொல். பொருள். மரபு. தொகுதி-3, பகுதி-3, ப-177) எனக் கூறுகிறார் பாவலர். அவ்வகையில் தொல்காப்பியரின் உயிர்கோட்பாட்டினை மானிடவியல் பார்வையில் அணுகுங்காலை மனிதனின் மனம் பற்றும் செயல், அச்செயலுக்கான படிநிலைகளை நடத்தும் வல்லமையைப் பெறும்.

இவ்விடம் மனித மனம் மொழியை எண்ணும் அதாவது நினைக்கும் பொழுது இலக்கணத்தோற்றத்தையும் அது உருவாக்கும் என்பதை நம்மால் உணர முடிகிறது. அவ்வகையில் எண்ணும் எழுத்தும் எனும் கல்வி முறையானது இலக்கண இலக்கியத்தையே சுட்டி நின்றன. அற இலக்கியமான ஐந்திணை எழுபதின் கடவுள் வாழ்த்துப்படலில் எண்ணும் என்னும் சொல் எண்ணுதல் எனும் சிந்தனையை முன்னிருத்தி அதனால் விளையும் கலைப்பயிற்சியை சுட்டுவதை,

எண்ணும் பொருளினிதே எல்லாம் முடித்தெமக்கு

நண்ணும் கலையனைத்தும் நல்குமால் - கண்ணுதலின்

முண்டத்தான், அண்டத்தான், மூலத்தான், ஆலம்சேர்

கண்டத்தான் ஈன்ற களிறு. – ஐந்70

என்கிறது. அவ்வாறே திருக்குறளும் எண் என்பதை சிந்தித்தல் எனும் பொருளில்

ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும்

எண்ணின் தவத்தான் வரும். – குறள்:264

பற்றுள்ளம் என்னும் இவறன்மை எற்றுள்ளும்

எண்ணப்படுவது ஒன்று அன்று – குறள்:438

எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்

எண்ணுவம் என்பது இழுக்கு – குறள்:467

எண்சேர்ந்த நெஞ்சத் திடனுடையார்க்கு எஞ்ஞான்றும்

பெண்சேர்ந்தாம் பேதைமை இல். – குறள்:910

எண்ணப்படுவது - எண்ணுதல் - எண்ணல், நினைத்தல்; ஆலோசித்தல்; மதித்தல்; தியானித்தல்; முடிவுசெய்தல்; கணக்கிடுதல்; மதிப்பிடுதல்; துய்த்தல். என்ற பல பொருட்களில் பயன்படுத்துகிறது. ஆனால் கல்வி அதிகாரத்தில் இடம்பெறும் குறளான

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்

கண்ணென்ப வாழும் உயிர்க்கு.. குறள்:392

எண் என்று சொல்லப்படுவன எழுத்து என்று சொல்லப்படுவன ஆகிய இரு வகைக் **கலைகளையும்** வாழும் மக்களுக்குக் கண்கள் என்று கூறுவர். என்று மு. வரதராசனாரும், வாழும் நல்லவர்க்கு **அறிவியலும் கலைஇயலும்** சிறந்த கண் என்று அறிந்தவர் கூறுவர். என்று சாலமன் பாப்பையாவும், **எண்ணும்** எழுத்தும் எனப்படும்

அறிவுக் கண்களைப் பெற்றவர்களே, உயிர் வாழ்வோர் எனக் கருதப்படுவார்கள் என்று மு. கருணாநிதி என்றும் விளக்குகிறார்கள்

ஊணொடு கூறை எழுத்தாணி புத்தகம்

பேணொடும் **எண்ணும் எழுத்திவை** மாணொடு

கேட்டெழுதி ஓதிவாழ் வார்க்கீய்ந்தார் இம்மையான்

வேட்டெழுத வாழ்வார் விரிந்து. – ஏலாதி:63

**எழுத்தினால் நீங்காதெண்ணால் ஒழியா** தேத்தி

வழுத்தினால் மாறாது மாண்ட - ஒழுக்கினால்

நேராமை சால உணர்வார் பெருந்தவம்

போகாமை சாலப் புலை. -ஏலாதி:38

உண்ணாது வைக்கும் பெரும் பொருள் வைப்பு இன்னா;

நண்ணாப் பகைவர் புணர்ச்சி நனி இன்னா;

கண் இல் ஒருவன் வனப்பு இன்னா; ஆங்கு இன்னா,

**எண் இலான் செய்யும் கணக்கு**.– இன்னா:16

ஆகிய கீழ்கணக்கு செய்யுள்கள் அனைத்தும் எண்ணை இலக்கணம் எனும் பொருளிலே முன்கொண்டு பாடத்தொடங்கின. எண் என்பதை கணக்கு என்று கூறும் பொழுதும் கணக்கு எனும் அறிவியல் இயற்பியல், வேதியியல், உயிரியல் என அனைத்து துறைகளுக்கும் ஆதாரமாக அமைவதைப்போல மொழியின் எண்ணான அதாவது மொழியின் இயக்க கருவிகளை அறியும் அறிவியல் பகுதி இலக்கணமே ஆகும். மொழிக்கல்வியில் எண் என்பது எண்ணுவது எனும் பொருளில் இலக்கணத்தையும், எழுத்து என்பது எழுவது எனும் உணர்வு வெளிப்பாட்டின் அடிப்படையில் தோன்றும் இலக்கியத்தையும் சுட்டி நின்றன.

முடிவுரை

இங்ஙனம் இலக்கிய இலக்கண கல்வி முறையில் அற இலக்கிய காலக்கட்டத்தில் பயன்படுத்தப்பட்ட எண் மற்றும் எழுத்து எனும் வழக்கு கணிதம் மற்றும் மொழி எனும் பான்மையைச் சுட்டாது இலக்கண இலக்கிய கல்வி முறையைச் சுட்டி நின்ற பான்மையை நம்மால் அறிய முடிகிறது.

துணைநூற்பட்டியல்

1. இறையனார் களவியல் என்னும் இறையனார் அகப்பொருள் – நக்கீரர் உரை. திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சிந்தாந்த நூற்பதிப்புக்கழகம் -1953

2. சிற்பி பாலசுப்பிரமணியம், நீல பத்மநாபன் (ப.ஆ) – புதிய தமிழ் இலக்கிய வரலாறு, சாகித்திய அகாதெமி வெளியீடு, மூன்றாம் பதிப்பு -2019
3. நாமக்கல் கவிஞர் உரை - திருக்குறள், பூம்புகார் பதிப்பகம், 2010 .
4. நீதி நூல் களஞ்சியம், 23 நூல்கள் விளக்க உரையுடன், கொற்றவை வெளியீடு, 2023
5. பாவலரேறு பாலசுந்தரம்.ச. - தொல்காப்பியம் ஆராய்ச்சிக் காண்டிகையுரை, 5 தொகுதிகள், பெரியார் பல்கலைக்கழகம், சேலம் -11, பிப்ரவரி 2012.
6. பாவாநந்தம்பிள்ளை.ச. பேரகத்திய திரட்டு மூலமும் உரையும், எஸ்.பி., ஸி.கே. அச்சுக்கூடம்,சென்னை, 1912

## References

[1]. இறையனார் களவியல் என்னும் இறையனார் அகப்பொருள் – நக்கீரர் உரை. திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சிந்தாந்த நூற்பதிப்புக்கழகம் -1953

[2]. சிற்பி பாலசுப்பிரமணியம், நீல பத்மநாபன் (ப.ஆ) – புதிய தமிழ் இலக்கிய வரலாறு, சாகித்திய அகாதெமி வெளியீடு, மூன்றாம் பதிப்பு -2019

[3]. நாமக்கல் கவிஞர் உரை - திருக்குறள், பூம்புகார் பதிப்பகம், 2010 .

[4]. நீதி நூல் களஞ்சியம், 23 நூல்கள் விளக்க உரையுடன், கொற்றவை வெளியீடு, 2023

[5]. பாவலரேறு பாலசுந்தரம்.ச. - தொல்காப்பியம் ஆராய்ச்சிக் காண்டிகையுரை, 5 தொகுதிகள், பெரியார் பல்கலைக்கழகம், சேலம் -11, பிப்ரவரி 2012.

[6]. பாவாநந்தம்பிள்ளை.ச. பேரகத்திய திரட்டு மூலமும் உரையும், எஸ்.பி., ஸி.கே. அச்சுக்கூடம்,சென்னை, 1912